02.12.2025

OS No: 133/2015

பி.வா.சா. 3 திரு. மெய்யப்பன் த/பெ. அம்மாசி

<u>வாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. தாவா சொத்து எந்த ஊரில் உள்ளது என்றால் அவத்தாரணப்பட்டி மற்றும் கருத்தம்பட்டியில் உள்ளது. எனது ஊர் மூத்தான்பட்டி என்றால் சரிதான். எனது ஊருக்கும் தாவா சொத்து உள்ள ஊருக்கும் இடையே எவ்வளவு கி.மீ தூரம் என்றால் 25 கி.மீ தூரம் இருக்கும். 4ம் பிரதிவாதி விஜயாவின் கணவர் லெட்சுமணன் எனக்கு என்ன உறவு என்றால் தாய்மாமன் உறவு ஆகும், தாவா சொத்துக்களின் சர்வே எண், விஸ்தீரணம் விவரம் தெரியுமா என்றால் தெரியாது. 4ம் பிரதிவாதியும் அவரது கணவரும் சுமார் 30 வருடங்களாக காரைக்குடியில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் சென்னையில் எத்தனை வருடங்களாக இருந்து வருகிறேன் என்றால் நான் சென்னையில் இல்லை கடந்த 25 வருடங்களாக மூத்தான்பட்டியில் தான் இருந்து வருகிறேன். 4ம் பிரதிவாதியின் கணவர் லெட்சுமணன் பரமக்குடியில் பொறியாளராக வேலை செய்கிறார் என்றும் வாரத்திற்கு காரைக்குடிக்கு வந்து செல்வார் என்றால் சரிதான். பி அட்டவணை 1, 2 இலக்கச் சொத்துக்கள் எந்த வருடம் எவ்வளவு ரூபாய்க்கு கிரையம் வாங்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. அந்த பத்திரங்களில் நான் சாட்சி கையெழுத்து செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி கிரையப் பத்திரம் எந்த மாதம் எந்த வருடம் வாங்கப்பட்டது என்ற விவரம் தெரியாது என்றால் சரிதான். லெட்சுமணன் கிரையம் வாங்கிய சமயத்தில் கிரையச் சொத்திற்கு என்ன முன் ஆவணங்கள் கொடுக்கப்பட்டது என்றால் அது எனக்கு தெரியாது. கிரையத்திற்கு முன்பு பி

அட்டவணை 1, 2 இலக்கச் சொத்துக்கள் யாருக்கு பாத்தியம் என்று நான் பார்த்தது இல்லை என்றால் சரிதான். 2011 வருடம் சுமார் 11/2 செண்டு இடத்தில் 2 வீடுகள் அதாவது 1 ஓட்டு வீடும், 1 ஆபிஸ் ரூம் கட்டப்பட்ட விவரம் எனக்கு தெரியுமா என்றும் அதன் நீள, அகலம் தெரியுமா என்றும் சொன்னால் தெரியாது. எவ்வளவு ரூபாய்க்கு யாரைக் கொண்டு மேற்படி கட்டிடம் கட்டப்பட்டது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மேற்படி ஓட்டு வீட்டிலும் ஆபிஸ் ரூம்மிலும் 4ம் பிரதிவாதியோ அவரது கணவரோ இருந்தது இல்லை என்றால் சரியல்ல. 4ம் பிரதிவாதியின் கணவரான எனது மாமா அங்கு இருந்துள்ளார். கடைசியாக மேற்படி ஓட்டு வீடு ஆபிஸ் ரூம்மை எப்போது சென்று பார்த்தேன் என்றால் எனது மாமா இருந்த போது சுமார் 10 வருடத்திற்கு முன்பாக பார்த்தேன். மேற்படி ஆபிஸ் ரூம் தற்போது அங்குள்ளதா என்றால் உள்ளது, தற்போது போனாலும் பார்க்கலாம். தாவா சொத்தில் வாதிகள் சட்ட விரோதமாக சுவாதீனம் எடுத்துக் கொண்டதாக சொல்வது எப்போது என்றால் எனது மாமா இறந்த பின்பு வருடம் தேதி மாதம் தெரியாது. காவல் நிலையத்தில் புகார் கொடுத்தது எனக்கு நேரடியாக தெரியாது என்றால் தெரியும். மேற்படி புகாரில் நான் கையெழுத்து எதுவும் செய்துள்ளேனா என்றால் இல்லை. மேற்படி புகாரின் பேரிலான விசாரணையில் வாதிகளோ 1, 2 பிரதிவாதிகளோ கலந்துக் கொண்டார்களா என்றால் இல்லை. 4ம் பிரதிவாதி விஜயா காவல் நிலையம் சென்றார் அவருடன் நான் சென்றேன். வாதிகளும் 1, 2 பிரதிவாதிகளும் போலீஸார் விசாரணைக்கு வராத நிலையில் எனது நிரூபணவாக்குமூலத்தில் வராத நிலையில் காவல் நிலையத்தில் புகார் செய்யப்பட்டு அதில் சுவாதீனம் ஒப்படைப்பதாக கூறிய விவரம் எனக்கு நேரடியாக தெரியும் என எதன் அடிப்படையில் சொல்லியுள்ளேன் என்றால் மேற்படி விவரம் எனக்கு தெரியாது. வாதிகளின் சொந்த ஊர், 1ம் பிரதிவாதி மற்றும் அவரது கணவர் ஆகியோரின் சொந்த ஊர் எது என்றால் தெரியாது. 1ம் வாதி, 1ம் பிரதிவாதி அவருடைய கணவர் தாவா சொத்தை

ஆக்கிரமித்தாக சொல்வதற்கு முன்பு எங்கு வாழ்ந்து வந்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். 4ம் பிரதிவாதியின் கணவர் லெட்சுமணன் தாவா சொத்தை 1ம் பிரதிவாதியிடம் கிரையம் வாங்கவில்லை என்றும், மேற்படி சொத்தில் ஆபிஸ் ரூமோ, வீடோ கட்டி அவர்கள் வசிக்கவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. லெட்சுமணன் தாவா சொத்தில் பி அட்டவணையில் கண்ட 1, 2 இலக்கச் சொத்தை கிரையம் வாங்கியதாக சொல்லப்படும் காலத்திற்கு முன்பே வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி அவருடைய கணவர் வீடு கட்டி அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எனது மாமா தான் வீடு கட்டினார். மேற்படி சொத்தில் ஆபிஸ் ரூம் என்ற அமைப்பு எப்போதும் இல்லை என்றால் சரியல்ல. லெட்சுமணன் மேற்படி சொத்தை கிரையம் பெற்றதாக சொல்லும் விவரமோ வீடும் ஆபிஸ் ரூமோ கட்டியதாக சொல்லும் விவரமோ காவல் நிலையத்தில் புகார் கொடுத்த விவரமோ தாவா சொத்துக்கள் பற்றிய விவரமோ எனக்கு எதுவும் தெரியாது என்றும் லெட்சுமணன் எனக்கு தாய் மாமன் உறவு என்பதால் அவருக்கு ஆதரவாக மேற்படி சாட்சியம் குறித்து பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

R Pandy

Digitally signed by R Pandy
Date: 2025.12.02 17:04:53 +0530